[2002 ஏப்ரல் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 61, திருமதி எஸ். ராஜம்மாள், திரு. எஸ்.எஸ். மணி நாடார், திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

61—

மானிய விலையில் மண்ணெண்ணெய்

7527—திருமதி எஸ். ராஜம்மாள்:
திரு. எஸ்.எஸ். மணி நாடார்:
திரு. ஜி.கே. மணி:

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டுமர மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலுள்ள கட்டுமர மீனவர்களுக்கு ஒரு லிட்டருக்கு 50 பைசா மானியமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. அதன் வாயிலாக ஒரு வருடத்திற்கு 1500 ரூபாய் மானியம் கிடைத்தது. ஒரு வருடம் முழுவதும் உள்ள Bill-ஐச் சேர்த்து வைப்பதில் சிரமம் ஏற்பட்டதால், அந்த Bill-ஐச் சரிவர கொடுக்காத காரணத்தினால் நிறுத்தப்பட்டதாக T.S.O. அவர்கள் காரணம் சொல்கிறார்கள். இந்த ஏழை கட்டுமர மீனவர்களுக்காக விதிமுறைகளைத் தளர்த்தி A.D. அல்லது அந்த சொசைட்டியினுடைய தணிக்கை அலுவலர் கையெழுத்தைப்

TRUTH ALONE TRIUMPHS

2002 ஏப்ரல் 2]

போட்டு, அதன் வாயிலாக அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்க வழி செய்வீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் விநியோகத்தைப் பொறுத்தவரை, பொது விநியோகக் கடைகளுக்கு முழுக்க முழுக்க மத்திய அரசினுடைய ஒதுக்கீட்டின் அடிப்படையிலேதான், அவர்களுடைய ஒதுக்கீட்டை நம்பியேதான் இந்த பொது விநியோகத் திட்டத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய வேண்டியிருக்கிறது. தற்போது நம்முடைய மாநிலத்தில் மொத்த மண்ணெண்ணெய் தேவை 74,781 கிலோ லிட்டராகும். மத்திய அரசு தற்போது மாநிலத்திற்கு 67,876 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை மட்டுமே ஒதுக்கீடு செய்து வருவதால், இது மாநிலத்தின் தேவையைவிட 6,905 கிலோ லிட்டர் குறைவாகும். மாநிலத்தின் தேவைக்கு ஏற்ற வகையிலே மத்திய அரசின் ஒதுக்கீடு இல்லாத நிலையில், கட்டுமர மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெயை வழங்குவது தற்போது இயலாத காரியமாக இருக்கிறது. மேலும், இப்போது மத்திய அரசு ஒரு லிட்டரை 9.00 ரூபாய்க்கு பொது விநியோகத் திட்டத்திலே வழங்குவதற்கு முடிவெடுத்து அறிவித்து நடைமுறைப்படுத்தியிருக்கிறது. அதிலேயும்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசு, சாதாரண மக்கள் பயன்படுத்துகிற இந்த மண்ணெண்ணெயை வழங்குவதிலே அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேதான், 9 ரூபாய்க்கு மத்திய அரசு கொடுத்தாலும்கூட, ஒரு லிட்டருக்கு 60 பைசா மானியமாக வழங்கி, 8 ரூபாய் 10 பைசாவிற்குத்தான் தமிழகத்திலே இருக்கிற அத்தனை 'கார்டு ஹோல்டர்ஸ்'-க்கும் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே தற்போது மீனவர்களுக்கு இதை வழங்க முடியாத நிலையிலே அரசு இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். மணி நாடார், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே கட்டுமர மீனவர்களுக்கு மானிய

விலையிலே மண்ணெண்ணெய் வழங்க இயலாத காரணத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அப்படிச் சொல்கின்ற நேரத்திலே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து சாதாரண ஏழையெளிய மக்களுக்கு 8 ரூபாய் 40 காசுக்கு மானிய விலையிலே மண்ணெண்ணெய் வழங்கக்கூடியத் அந்தத் திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது கட்டுமர மீனவர்கள் கடலுக்குச் சென்று திரும்பி வருவது கேள்விக்குறியாக இருக்கக்கூடிய நிலை; வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாத நிலை. இவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மக்கள் நலனிலே அக்கறை கொண்டிருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய அரசு இவர்கள் மீது கருணைகூர்ந்து எந்தவகையிலாவது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை, வறுமைக்கோட்டிலிருந்து உயர்த்துவதற்கு நல்ல நோக்கத்தோடு மானிய விலையிலே மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்பது, அவசிய அத்தியாவசியத் தேவையாக இருக்கின்ற காரணத்தினாலே அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு—அந்த சங்க உறுப்பினர்கள் மாதம் 80 ரூபாய் செலுத்துகிறார்கள். அப்படி 80 ரூபாய் செலுத்துகின்ற நேரத்திலே—மத்திய அரசு நிதியாக, மாநில அரசு நிதியாக இரண்டு மடங்குத் தொகை வழங்கப்பட்டு, ஆண்டுக்கு 2,400 ரூபாய் வழங்குவதாக உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று மீனவர் சங்க உறுப்பினர்களெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதைக் கூடுதலாக வழங்க அரசு முன்வருமா? அதேநேரத்திலே, ஆண்களாக இருக்கக்கூடிய உறுப்பினர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதாவது ஒரு கேள்வி கேளுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்கள் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய சங்கங்களில், அந்த உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய உதவித் தொகையை, மீன்பிடித் தொழிலில், மீனை விற்பனை செய்யக்கூடிய மகளிர், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக இருக்கக்கூடிய பெண்களுக்கும் அந்த நிவாரணத் தொகை—அதாவது அந்த நிவாரணத் தொகை தேசிய மீனவர் நிவாரண நிதி என்று வழங்கப்படுகிறது. அந்த நிவாரண நிதி—பெண்களுக்கும் சேர்த்து வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2002 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொல்லியிருக்கிற ஆலோசனைகளையெல்லாம் மீன்வளத் துறை தீவிரமாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று திரும்பி வரும்போது, சில நாட்கள் மண்ணெண்ணெய் வாங்கக்கூட இயலாமல், அவர்களுக்கு வருமானம் இல்லாத நிலை ஏற்பட்டுவிடுகின்றது. 'Out-Board Engine', பொருத்தி, அதற்கு மண்ணெண்ணெய் வாங்கும்போது, வெளி மார்க்கெட்டில் 20 ரூபாய் வரை கொடுத்து வாங்குகின்றார்கள். நமது அண்டை மாநிலமான கேரளாவில் ஒவ்வொரு மீனவருக்கும் மாதந்தோறும் 400 லிட்டர் மண்ணெண்ணெய் நியாயவிலைக் கடை மூலம் வழங்கப்படுகிறது. அதுபோல, நமது மீனவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவர்களும் பரிசீலிப்பதாக நினைக்கின்றேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழக ஏழை மீனவர்களுக்கு கேரளாவில் வழங்குவது போன்று மாதம் 400 லிட்டர் மண்ணெண்ணெயை ரேஷன் விலையில் வழங்குவதற்கு, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் பரிந்துரையைப் பெற்று அறிவிக்க வேண்டும்; அறிவிப்பீர்களா என்று நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை, மத்திய அரசு லிட்டருக்கு 9 ரூபாய் விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருந்தாலும்கூட, கருணையுள்ளம் கொண்ட, தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாதாரண மக்கள் பயன்படுத்துகிற இந்த மண்ணெண்ணெயை 60 பைசா மானியத்திலே 8 ரூபாய் 40 பைசாவிற்குக் கொடுத்தால் போதும் என்று உத்தரவிட்டு, அது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள், மீனவர்களுக்குக் கேட்டிருக்கிற இந்தச் சலுகை குறித்து, மீன்வளத் துறையுடன் கலந்தாலோசிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி இளம்வழுதி.

முற்பகல் 10-55

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்களுக்கு மானிய விலையிலே மண்ணெண்ணெய் தர முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கெனவே மானிய விலையிலே டீசல் தரப்பட்டு வந்தது. அது தொடர்ந்து தரப்படுகிறதா அல்லது அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மண்ணெண்ணெயோடு நில்லுங்கள்.

வினா எண் 62, திரு. ஆஸ்டின், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

62—

சப்போட்டா பழங்கள் ஏற்றுமதி

***3818—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உற்பத்தியாகும் சப்போட்டா பழங்களை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உற்பத்தியாகும் சப்போட்டா பழங்களைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போதில்லை.

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப்போட்டா பழங்கள் திண்டுக்கல் மாவட்டத்தில், குறிப்பாக, வேடசந்தூர் தாலுகா பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தில் சில பகுதிகளிலும் அதிகமாக விளைகின்றன. அந்தப் பகுதிகளிலே கிட்டத்தட்ட 10 இலட்சத்திற்கும் அதிகமான சப்போட்டா மரங்கள்